**S.T.C No.135/2024**

**Dated: 20.03.2025**

**PW: 1** வெங்கட்ராமன்

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

**குறுக்கு விசாரணை :**

1. உங்களது மொபைல் எண் 9894473939 என்றால் சரிதான். Lemons club பில்லில் உள்ள மொபைல் எண் உங்களுடையது என்றால் சரிதான். மேற்படி பில்லிலுள்ள கையொப்பம் உங்களுடையது தான் என்றால் சரிதான். சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்ட மேற்கண்ட பில் புக் எண்ணம்–2 ஆனது எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட பெயரில் எதிரி ஜவுளி கடை நடத்தி வந்தார் என்றால் சரிதான். எதிரி, எதிரியின் மனைவி குணவதி பெயரில் ஜெய் ஆதித்யா வாசிங் என்ற பெயரில் சலவைசெய்யும் தொழிற்சாலையும் லாயல் கிளாசிக் கிரியேசன் என்ற பெயரில் ஆயத்த ஆடை உற்பத்தி செய்யும்தொழிலும் செய்து வந்தார் என்றால் சரிதான்.

2) மேற்படி Lemons club ல் 2015 ல் நீங்கள் ஒரு பங்குதாரராக சேர்ந்தீர்கள் என்றால் சரியல்ல. மேற்படி Lemons club ஆரம்பிப்பதற்காக எதிரி கோவில்பட்டி பாரத ஸ்டேட் வங்கியில் ரூ42,00,000/– கடனாக பெற்றிருந்தார் என்றாலும், மேற்கண்ட கிளப்பில் உங்களுடைய பங்குதொகையாக ரூ4,16,000/– செலுத்தி ஒரு பங்குதாரராக சேர்ந்தீர்கள் என்றாலும் சரியல்ல. ரூ4,16,000/–த்தை எதிரிக்கு கடனாக கொடுத்தேன்.

3) என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் நானும் எதிரியும் இருக்கிறோம் என்றாலும் அதில் எதிரி , லெமன்ஸ் கிளப்–ன் சக நிர்வாகியும் எனது ஆருயிர் நண்பர் திரு.வெங்கட்ராமன் அவர்களுக்கு இன்று பிறந்தநாள் ,அவர் சீறும் சிறப்புமாக பல்லாண்டு வாழ வாழ்த்துங்கள் நண்பர்களே என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் மேற்கண்ட புகைப்படம் எதிரியின் முகநூலில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். ( **சாட்சியால்ஒப்புக்கொள்ளப்பட்ட புகைப்படம் எ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4) மேற்படி லெமன்ஸ் கிளப்பிற்கு வேலைக்கு ஆட்கள் தேவைப்பட்டதால் எதிரியின் முகநூல் பக்கத்தில் விளம்பரம் கொடுக்கப்பட்டது என்றாலும் அந்த விளம்பரத்தில் உங்களது மொபைல் நம்பரும் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் எ்ன்னிடம் காட்டப்படும் புகைப்படம் மேற்கண்ட விளம்பர புகைப்படம் என்றாலும் அது எதிரியின் முகநூல்பக்கத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது

என்றாலும் சரிதான். ( சாட்சியால் ஒப்புக் கொள்ளப்பட்ட புகைப்படம் எ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

5) மேற்படி லெமன்ஸ்கிளப்பின் நாள்தோறுமான நிர்வாகத்தை நீங்கள் பார்க்கவேண்டும் என்றும், Order எடுப்பது , Purchase பண்ணுவது போன்ற வெளிவிவகாரங்களை எதிரி பாரக்கவேண்டும் என்றும் பேசி முடிவு எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்கண்ட கடையில் சந்தோஷ், விக்னேஷ் கண்ணன் ஆகியோர்கள் பணிபுரிந்து வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி லெமன்ஸ் கிளப் கோவில்பட்டி ராமசாமிதாஸ் பூங்காவிற்கு எதிரே யுள்ள கீதாஹார்டுவேர்ஸ் காம்பெக்ஸில் ஆரம்பிக்கப்பட்டது என்றால் அவ்வாறு தான் எதிரி என்னிடம் சொன்னார்.

**எதிரி தரப்பில் வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken before me in open court, read over to the witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.K.Baskar
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
**Kovilpatti.**